செய்தி வெளியீடு எண்: 141 நாள்: 21.02.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் 2 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நூலகக் கட்டடம் மற்றும் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆய்வு மாணவர் விடுதிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கை ஒன்று 1 கோடி ரூபாய் வைப்புத்தொகையாக வைத்துத் தொடங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 28.6.2018 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் அறிக்கை வெளியிட்டார்கள். அதன்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கை தொடங்குவதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலையை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் கோ. விசயராகவன் அவர்களிடம் வழங்கினார்கள்.

2018–19ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடுகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கு வசதியாக 9 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்த்தாய் நூல் விற்பனை ஊர்தியின் சேவையை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஊர்தியின் சாவியை வாகன ஓட்டுநருக்கு வழங்கினார்கள்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தெரிவு செய்யப்பட்ட பாடல்கள், உலக மொழிகளான பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழிகளிலும், இந்திய மொழிகளான

மலையாளம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 13.9.2016 அன்று அறிக்கை வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க மொழிபெயர்ப்பு பணிக்காக தமிழ்நாடு அரசால் 15 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கான நிதி சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

அதன்படி, மலையாளம், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தெரிவு செய்யப்பட்ட பாடல்கள் அடங்கிய நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் வெளியிட, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மேலும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களை மொழி பெயர்த்த திருமதி இராசலட்சுமி சீனிவாசன் (இந்தி), திரு.கு.கோ. சந்திரசேகரன் நாயர் (மலையாளம்), திரு.எல்.ஆர். சுவாமி (தெலுங்கு) ஆகியோருக்கு மொழிபெயர்ப்பு பணிக்காக மதிப்பூதியமாக தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், கூர்ந்தாய்வு செய்த முனைவர் குறிஞ்சி வேலன் அவர்களுக்கு 12 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ. நவநீதகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன்,இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.2.2019**